**செய்தி வெளியீடு** **நாள்: 30.01.2026**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொளத்தூரில் சிஎம்டிஏ சார்பில் நடைபெற்று வரும் இரத்த சுத்திகரிப்பு நிலையம், மறுவாழ்வு மையம் மற்றும் காவல் துறை கட்டடங்களின் இறுதிக்கட்ட பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (30.01.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, அகரம், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையத்தின் இறுதிக்கட்டப் பணிகளையும் மற்றும் கொளத்தூர், 70 அடி சாலையில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டுவரும் காவல் துணை ஆணையர் அலுவலகம் மற்றும் பெரவள்ளூர் காவல் நிலையத்தின் இறுதிக்கட்டப் பணிகளையும் மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

இந்த ஆய்வுகளின் போது, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., கொளத்தூர் காவல் துணை ஆணையர் திரு.பி.குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் திரு.வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர்கள் திரு.எ.நாகராஜன், திருமதி.அமுதா, திருமதி.யோகபிரியா, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரு.ஐ.சி.எப்.முரளிதரன், திரு.சந்துரு, திரு.மகேஷ்குமார் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate ™